செ.வெ.எண் : 52/ஜூலை நாள் : 28.07.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## கூட்டுறவுத் துறையின் சார்பாக நடைபெற்ற விழாவில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் 26 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.8 கோடி மதிப்பிலான கடனுதவிகள்

## மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (28.07.2017) கூட்டுறவுத் துறையின் சார்பாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் விவசாயிகளுக்கு அடையாள அட்டை மற்றும் கடனுதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

இவ்விழாவில், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் மற்றும் 26 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த 654 நபர்களுக்கு ரூ.8.08 கோடி மதிப்பிலான கடனுதவிகளை வழங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார்.

அதன்பிறகு மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியினை பின்பற்றி தமிழ்நாடு அரசு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. அந்த வகையில் இன்று நடைபெறும் இவ்விழாவில் கூட்டுறவுத் துறையின் மூலம் விவசாயிகளுக்கு உழவர் கடன் அட்டைகள் மற்றும் ரூபே (Rupay) அட்டைகளும், மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு நேரடி கடனுதவி, கூட்டு பொறுப்புக்குழு கடனுதவி, வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக கடனுதவி, பணியாளர் கூட்டுறவு சிக்கன நாணய சங்க கடனுதவி, தாட்கோ திட்ட கடனுதவி மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான கடனுதவி என பல்வேறு கடனுதவி திட்டங்களின் கீழ் 26 மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சார்ந்த 654 நபர்களுக்கு ரூ.8,08,11,000/- மதிப்பிலான கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் வளர்ச்சியினை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்லும் வகையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் நடப்பு கல்வியாண்டில் மாணவ, மாணவியர்களுக்கான மடிக்கணினிகள் வருகின்ற ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் இருந்து வழங்கப்படும். மாவட்டத்தில் உள்ள இளைஞர்கள் பயன்பெறும் வகையில் புதிய அரசு சட்டக் கல்லூரி துவங்கப்பட்டுள்ளது. அதேபோல மாவட்டத்தில் அரசு மருத்துவக்கல்லூரி அமைப்பதற்கு தேவையான முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுதவிர இராமேஸ்வரத்திலிருந்து சென்னை வரையில் செல்லும் இரயில்கள் அனைத்தும் உச்சிப்புளி இரயில் நிறுத்தத்தில் நிறுத்தம் செய்து செல்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் மாவட்டத்தில் உள்ள இளைஞர்கள் பயன்பெறும் அவ்வப்பொழுது வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன என மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் பேசினார்.

இவ்விழாவில் இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.பெ.ஜெயஜோதி, கூட்டுறவு கடன் சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.மு.முருகேசன், இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் திரு.தி.ஜெயராமன், மத்திய கூட்டுறவு வங்கி பொது மேலாளர் திரு.பிரான்சிஸ் உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**